**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 178/2024**
**U/s. 294(b),506(1) IPC**
**PROSECUTION WITNESS NO. 3 (LW. 5)**

| | |
|---|---|
| **Name** : மணிகண்டன் | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2025** |

**1** வது எதிரி ஆஜர்**. 2** வது எதிரி ஆஜர் இல்லை**. 355 BNSS** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர் , செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No. 178/2024 25.02.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.20 AN**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தஞ்சாவூர் கரந்தை தைக்கால் தெருவில் குடியிருந்து பால் வியாபாரம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. கொடிமரத்து மூலை அருகே சக்தி பேப்பர் ஸ்டோர் அவரிடம் சுரேஷ்பாபு பத்திரத்தை கொடுத்து விட்டு ரூ. 1,00,000/– பணத்தை வாங்கி கொண்டார். பணத்தை திருப்பி கொடுத்து பத்திரத்தை கேட்டபோது கணேசன் கொடுக்கமறுத்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சுரேஷ்பாபு கணேசனிடம் பத்திரத்தை கொடுத்து பணம் பெற்று கொண்டார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அவர்களது கொடுக்கல் வாங்கல் குறித்தும் எனக்கு தெரியாது . அவர் பத்திரத்தை வாங்கும் போது என்னை அழைத்து சென்றாரா என்றால் இல்லை. போலீஸ் இது சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பார்வை மகசரில் என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது.

**(1 வது எதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணையை 2 வது எதிரி தரப்பு வழக்கறிஞர் ஏற்று கொள்வதாக கூறினார். )**

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம் – S.T. கனிமொழி.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 178/2024**
**U/s. 294(b),506(1) IPC & 4 of TNPCEI Act**
**PROSECUTION WITNESS NO. 4 (LW. 7)**

| | | |
|---|---|---|
| **Name** | **:** ரவிச்சந்திரன் | |
| **Father's/Husband Name :** | | **Occupation :** |
| **Address** | **:** | **Age : /2025** |

**1** வது எதிரி ஆஜர்**. 2** வது எதிரி ஆஜர் இல்லை**. 355 BNSS** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர் , செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**C.C.No. 178/2024 25.02.2026 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.35 AN**

**முதல் விசாரணை:**

நான் தற்போது தஞ்சாவூர் கரந்தையில் குடியிருந்து கோவில் திருப்பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள எனது கையெழுத்து எந்த தேதி, மாதம், வருடம் செய்தேன் என்று ஞாபகமில்லை. ஓம் சக்தி பிரிண்ட்ர்ஸ் அதன் உரிமையாளர் கணேசனிடமிருந்து சுரேஷ் பாபு என்பவர் பத்திரத்தை அடகு வைத்து ரூ. 60,000/- பணம் வாங்கினார். பிறகு பணத்தை திருப்பி கொடுத்து பத்திரத்தை திருப்பி கேட்டபோது கணேசன் பத்திரத்தை திருப்பி கொடுக்கவில்லை. ரூ. 60,000/- பணத்திற்கு பத்து லட்சம் ரூபாய் கொடுத்தால் தான் தருவேன் என்றும், இந்தபத்திரம் என்னிடம் இல்லை அறிவு என்பவரிடம் தான் பத்திரம் உள்ளது. பத்து லட்சம் ரூபாய் கொடுத்தால் தான் நான் அவரிடமிருந்த பத்திரத்தை வாங்கி தருவேன் என்று சொன்னார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1 வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் அசாஆ 2 ஆககுறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது. சாட்சியை மேற்கு காவல் நிலைய தலைமை காவலர் 2376 திருமதி. மோகனசுந்த அவர்கள், நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்தார்.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 18.4.2023 ம் தேதி 10.00 மணிக்கு எனது சொந்த வேலையின் காரணமாக நானும், பரமகுரு என்பவரும் சொந்த வேலையாக தஞ்சை கீழராஜவீதி, ஓம் சக்தி பிரிண்ட்ர்ஸ் அருகில் நின்று கொண்டிருந்தபோது தஞ்சை நகர மேற்கு காவல் நிலைய போலீசார் ஓம் சக்தி பிரிண்ட்ர்ஸ் வாசலில் இரண்டு நபர்களை பிடித்து விசாரித்து கொண்டிருந்தாகவும், எங்களை போலீசார் சாட்சியாக இருக்கும்படி கேட்டு கொண்டதற்கிணங்க

எங்கள் முன்னிலையில் கணேசன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் பதிவு செய்ததாகவும், அதில் நானும் , பரமகுருவும் கையொப்பம் செய்தோம் என போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிக்கு பயந்து எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் நானும், எனது நண்பர் பரமகுரு என்பவரும் ஒப்புதல் வாக்குமூலத்தில் போலீசார் கேட்டதன் அடிப்படையில் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்மந்தமாக வாதிக்கும், எதிரிக்கும்பணம் கொடுக்கல் வாங்கல் குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் அங்கு பேசி கொண்டார்கள். ஆஜர் 1 வது எதிரியை எனக்கு தெரியாது. 2 வது எதிரி கணேசனை தெரியும். இவ்வழக்கில் யார் யாரிடம் பணம் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. ஆனால் அங்கு பேசி கொண்டிருந்தார்கள், அதன் அடிப்படையில் நான் முதல் விசாரணையில் சொன்னேன். போலீசார் சம்பவம்குறித்து என்னிடம் சொன்னதன் அடிப்படையிலும், அங்கு பேசி கொண்டிருந்ததை நான் கேட்டதன் அடிப்படையில் நான் முதல் விசாரணையில் சொன்னேன். எனக்கு நேரடியாக இந்த வழக்கு சம்பவம் குறித்து தெரியாது என்றால் சரிதான்.

**<u>2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் முதல் விசாரணையில் கூறிய தகவலை தான் போலீசார் ஒரு தாளில் எழுதி என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கினார் என்றால் சரிதான். அந்த தாளில் என்ன எழுதி இருந்தது என்று தெரியுமா என்றால் நான் படித்து பார்த்துதான் கையெழுத்து செய்தேன். நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் நான் முதல் விசாரணையில் கூறி ய தகவல் தான் சொல்லப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணத்தை யார் எழுதினார் என்று எனக்கு ஞாபகமில்லை. அதில் யார் யார் கையெழுத்து செய்தார்கள் என்று தற்போது ஞாபகமில்லை. நான் கையெழுத் செய்வதற்கு முன்பு அந்த ஆவணத்தில் வேறு யாரேனும் கையெழுத் செய்திருந்தாரா என்றால் என்று எனக்கு ஞாபகமில்லை.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம் – S.T. கனிமொழி.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.